தினமணி

**புகையிலை உற்பத்தியால் அதிக வருமான இழப்பு**

First Published : 09 May 2011 04:38:13 AM IST

சென்னை, மே 8: புகையிலை உற்பத்தியால் இந்திய அரசுக்கு கிடைக்கும் லாபத்தை விட வருமான இழப்பே அதிகம் என அடையாறு புற்றுநோய் மையத்தின் மருத்துவ நிபுணர் சுரேந்திரன் தெரிவித்தார்.

உலக புகையிலை ஒழிப்பு தினம் மே 31 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி டாக்டர் குப்தா பல் மருத்துவமனை, அடையாறு புற்றுநோய் மையத்தின் சார்பாக ஓட்டேரியில் புகையிலை ஒழிப்பு கருத்தரங்கம், புற்றுநோய் இலவச பரிசோதனை முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் சுரேந்திரன் பேசியது: உலக அளவில் புகையிலை உற்பத்தியிலும், ஏற்றுமதி தொழிலிலும் இந்தியா சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கிறது. இதன் மூலம் இந்திய அரசுக்கு ஓராண்டுக்கு ரூ. 5 ஆயிரத்து 768 கோடி வருமானம் வருகிறது.

ஆனால், இந்த புகையிலையால் ஏற்படும் புற்றுநோயால் இந்தியாவில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சிகிச்சைக்காக தலா ஒரு நோயாளிக்கு அரசு அன்றாடம் செய்யும் செலவுத் தொகை ரூ. 17,965 ஆகும். இந்தியாவில் மட்டும் சுமார் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, புற்றுநோய்க்கென ஓராண்டுக்கு மட்டும் அரசுக்கு ரூ. 27 ஆயிரத்து 760 கோடி செலவு ஏற்படுகிறது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மக்கள் நலன் பாதிக்கப்படுவதோடு அரசுக்கு தேவையில்லாத வருமான இழப்பும் ஏற்படுகிறது. எனவே இந்தியாவில் புகையிலை உற்பத்தியையும், அதன் விநியோகத்தையும் அடியோடு ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலக அளவில் புற்றுநோயால் அதிகமாக பாதிக்கப்பட்டு வருவது சீனா. இதற்கு அடுத்தப்படியாக இந்திய மக்கள்தான் அதிக அளவில் இந்த ஆள்கொல்லி நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலை நீடித்தால் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 16 கோடி பேர் புற்றுநோய் பாதிப்பால் பலியாவார்கள் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது என்றார் டாக்டர் சுரேந்திரன்.

குப்தா பல் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் சந்திரகுப்தா: சிகரெட்டில் 4,000 வகையான நச்சுப்பொருள்கள் உள்ளன. மேலும் அதில் உள்ள கொடிய நச்சுப் பொருள் நிக்கோடின். இதுவே மனிதனின் மூளையில் உள்ள செல்களில் தங்கி மீண்டும் புகைப்பிடிக்கும் ஆர்வத்தை தூண்டுகிறது. இவை மனிதனின் ரத்த செல்களை சிதைத்து ரத்த ஓட்டத்தை நிறுத்திவிடும். இதனால் மாரடைப்பு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு உயிரிழப்பு நேரிடும்.

வாய்ப் புற்றுநோய்க்கான அறிகுறிகள்: உதடுகளில் சிறிய புண் போல ஏற்பட்டு அதிகப்படியான வலி ஏற்படுதல், வாயின் ஓரங்கள் சிவப்பு நிறமாக மாறுவது, வாய் திறக்க இயலாமை, பல் ஈறுகளில் ரத்தக் கசிவு ஆகியவையே வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகள் ஆகும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக பல் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**பயிர்களில் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்'**

First Published : 08 May 2011 12:08:20 PM IST

அரவக்குறிச்சி, மே 7: பயிர்களில் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை மிகவும் அவசியம் என அரவக்குறிச்சி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதிகளில் உள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும் என்றால் விளைநிலத்தில் மண் பரிசோதனை செய்வது அவசியம்.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மு.சௌந்திரம்மாள் சனிக்கிழமை கூறியது:

மண்ணின் வளம் அறிந்து அதன் தன்மைக்கு ஏற்ப பயிர்கள் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். இதற்கு மண் பரிசோதனை அவசியம்.

மண் பரிசோதனைக்கு மண் மாதிரிகளை சரியான முறையில் எடுக்க வேண்டும். மாதிரிகள் தவறாக இருந்தால் பரிசோதனை முடிவுகளும் தவறாகி மகசூல் பாதிப்படையும். வரப்பு ஓரங்கள், நடைபாதை, உரத்தை குவித்த இடம், நிழல்படும் இடங்களில் மாதிரிக்கு மண் எடுக்கக் கூடாது.

மாதிரி எடுக்கும் இடத்தின் மேல் புறத்தில் சுத்தம் செய்து 15 செ.மீ குழி வெட்டி அதிலிருந்து மாதிரிக்கான மண்ணை வழித்து எடுக்க வேண்டும். இது போன்று ஒரு ஏக்கரில் 10 முதல் 15 இடங்களில் மண் மாதிரிகள் எடுத்த பின்னர் அனைத்துப் பகுதிகளிலும் சேகரித்த மண்ணை சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் கொட்டி கல் மற்றும் தாவர உபரிகள் அகற்றி நிழலில் காய வைக்க வேண்டும்.

சேகரித்த மண்ணை 4 பாகங்களாக பிரித்து எதிர் எதிரே உள்ள இரண்டு பாகங்களிலிருந்து அரை கிலோ அளவு மண்ணை பயன்படுத்தப்படாத துணிப்பை அல்லது பாலித்தீன் பையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர், முழு முகவரி, சர்வே எண், இதற்கு முன்பு பயிரிட்ட பயிர், தற்போது பயிரிடப் போகும் பயிர் ஆகிய விபரங்களை எழுதி பையில் வைத்து கட்டி உதவி வேளாண்மை அலுவலர் மூலமாக மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும். பின்னர், பரிசோதனை அறிக்கையினை பெற்று அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள படி உரமிட்டு சாகுபடி செய்து பயனடையலாம் என்றார்.

**அரசு நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

First Published : 08 May 2011 11:00:15 AM IST

கிருஷ்ணகிரி, மே 7: கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் தொடங்க உத்தரவிட்ட மாவட்ட ஆட்சியருக்கு விவசாயிகள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

÷கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயனடையும் வகையில் அரசு நெல் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர்.

÷இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் காவேரிப்பட்டணத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.

÷இதையடுத்து, தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் கே.எம்.இராமகவுண்டர் தலைமையில், மாவட்டத் தலைவர் ஜி.வேலு, பொருளாளர் சுப்பிரமணிரெட்டி உள்ளிட்ட விவசாயிகள், மாவட்ட ஆட்சியர் வி.அருண் ராயை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

**காய்கறிப் பயிர்களில் காய்ப் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த யோசனை**

First Published : 08 May 2011 11:11:17 AM IST

போடி, மே 7: காய்கறிப் பயிர்களில் காய்ப் புழுக்களின் ஆதிக்கம் அதிகளவில் உள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து போடி தோட்டக்கலை உதவி இயக்குநர் கெர்சோன் தங்கராஜ் விளக்கமளித்துள்ளார்.

அவர் கூறியுள்ளது:

காய்கறிகளில் அதிகம் பயன்படுத்தும் கத்தரி, வெண்டை, தக்காளி போன்றவற்றில் காய்ப்புழுக்கள் தாக்குவதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். அவற்றைத் தடுக்க கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைபிடிக்கலாம்.

கத்தரி: கத்தரி பயிரில் தண்டுப்புழு மற்றும் காய்ப்புழுக்களின் தாக்குதல் இருந்தால் நுனி வாடிக் காணப்படும். கத்தரியை நட்ட 15-20 நாளில் எண்டோசல்பான் 2 மி.லி. அல்லது கார்பரில் நனையும் தூள் 2 முதல் 4 கிராம் அல்லது குனைல்பாஸ் 2 மி.லி. அல்லது வேப்ப எண்ணெய் 2 மி.லி. அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 1 லிட்டர் நீரில் 50 மி.லி. கலந்து தெளிக்கலாம்.

உயிரியல் நஞ்சு மருந்தான பாக்டீரியல் துரிஞ்சன்சிஸ் (பி.டி.) மருந்தினை ஒரு ஹெக்டருக்கு 1 கிலோ வீதம் தெளிக்கலாம். டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணிகளை 15 சி.சி. ஒரு ஹெக்டருக்கு வெளியிட்டு பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளலாம். ஒட்டுண்ணி உபயோகிக்கும்போது பூச்சி மருந்து தெளித்தல் கூடாது.

வெண்டை: வெண்டைப் பயிரில் 1 லட்சம் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி வெளியிட்டு காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தலாம். 1.5 மி.லி. எண்டோசல்பான் அல்லது கார்பரில் 1 லிட்டர் நீரில் 3 கிராம் வீதம் கலந்து தெளித்தால் போதும்

தக்காளி: தக்காளியில் ஒரு ஹெக்டருக்கு 50 ஆயிரம் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணிகளை விட்டால் போதுமானது. எண்டோசல்பான் 2 மி.லி. அல்லது கார்பரில் நனையும் தூள் ஒரு லிட்டர் நீரில் 2 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம்.

மிளகாய்: மிளகாயில் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 3 மி.லி. அல்லது குயினைல் பாஸ் 2.5 மி.லி. அல்லது கார்பரில் 3 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

விஷ உணவு: தக்காளிப் பயிரினை தாக்கும் புரோடினியாவைக் கட்டுப்படுத்த கார்பரில் 1.250 கிலோ மருந்துடன் 1.250 கிலோ வெல்லம், 12.500 கிலோ தவிடு, 7.5 லிட்டர் தண்ணீருடந் கலந்த நச்சுணவினை உருண்டைகளாகத் தயார் செய்து வயலில் ஆங்காங்கே வைக்கலாம். மிளகாய் பயிரிலிரும் இதே முறையைப் பின்பற்றலாம்.

என்.பி.வி. கரைசல்: பச்சைக் காய்ப்புழுவினைக் கட்டுப்படுத்த இந்தக் கரைசல் பயன்படுகிறது. 600 புழுக்களைக் கட்டுப்படுத்த 300 கிராம் பருத்தி விதை சாறு, அரை கிலோ வெல்லம், 200 மி.லி. ஒட்டும் திரவம், 200 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம்.

காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்தவும், தோட்டக்கலை துறையில் மானியம் பெறவும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகலாம் என்றார் கெர்சோன் தங்கராஜ்.

**தோட்டக்கலை செய்முறைப் பயிற்சி முகாம்**

First Published : 08 May 2011 12:25:12 PM IST

நாகர்கோவில், மே 7: நாகர்கோவில் பார்வதிபுரத்தில் வீட்டுக்கலையும், தோட்டக்கலையும் குறித்த இலவச செய்முறைப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இம்முகாமை பி.எஸ். ராஜ் தொடங்கி வைத்தார். அரசு தோட்டக்கலை உதவி இயக்குநர் ஒய். ராஜகுமார் பேசினார். வீட்டுக்கலையும், தோட்டக்கலையும் குறித்து பேராசிரியர் லேமுவேல், மைக்கேல், தங்கலீலா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

மாடித்தோட்டம், மூலிகைச் செடிகள், தாவரப் பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள், காய்கறிச் சாகுபடி, மண்புழு உரம் தயாரிப்பு குறித்துப் பயிற்சியில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மே 29-ம் தேதியும் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடத்தவும், ஒவ்வொரு மாதமும் வகுப்புகள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. லில்லி மேரி நன்றி கூறினார்.

**மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்**

First Published : 08 May 2011 09:33:04 AM IST

புதுச்சேரி, மே 7: புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நன்னீர் நிலைகளில் கூட்டு மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் அண்மையில் நடந்தது.

÷வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் அ.ராமமூர்த்தி முகாமைத் தொடங்கிவைத்து பேசியது:

÷நன்னீர் நிலைகள் மற்றும் செயற்கையாக அமைக்கப்பட்ட குளங்களில் மீன் வளர்ப்பு மேற்கொள்வதால் விலை மலிவான புரதச் சத்து மிகுந்த உணவு உற்பத்தி செய்யப்படுவதோடு, விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

÷இந்தியப் பெருங்கெண்டை மீன் வகைகளான கட்லா, ரோகு, மிர்கால் உள்ளிட்டவைகளோடு, வெளிநாட்டு பெருங்கெண்டை மீன் வகைகளான வெள்ளிக் கெண்டை, சாதக் கெண்டை, புல் கெண்டை போன்றவற்றை ஒன்றாக குளத்தில் இட்டு வளர்த்து மீன் உற்பத்தியை பெருக்கலாம் என்றார்.

÷மீன் வளத் தொழில்நுட்ப வல்லுநர் திருமூலன் கலந்துகொண்டு, குளம் தயார் செய்தல், உரமிடுதல், மீன் குஞ்சு இருப்பு செய்தல், உணவளித்தல், அறுவடை செய்து விற்பனை செய்தல் குறித்து விவரித்தார்.

இதில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

**பருத்திச் செடிகளில் நோய் தாக்குதல்**

First Published : 08 May 2011 11:17:30 AM IST

காரியாபட்டி, மே 7: காரியாபட்டி, தோப்பூர், வரலொட்டி ஆகிய பகுதிகளில் 500 ஏக்கர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆறு மாதப் பயிரான பருத்தி, பிப்ரவரியில் நடவு செய்யப்பட்டு தற்போது பல இடங்களில் அறுவடை நடந்து வருகிறது. தாமதமாக நடவு செய்யப்பட்ட பருத்திச் செடிகள் தற்போதுதான் பூத்த நிலையில் உள்ளன. இந்தச் செடிகளில் கற்றாழை நோய் தாக்கியதால் செடிகள் கருகின்றன. இதனால் பல ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட பருத்திச் செடிகள் நாசமாகின்றன. இதனால் ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி தோப்பூரைச் சேர்ந்த விவசாயி மாரிச்சாமி கூறுகையில், கடந்தாண்டு சரிவர மழை இல்லாததால் விதைத்த பருத்தி வளரும் நிலையில், கருகியதால் பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பலவித மருந்து அடித்தும் நோய் தாக்குதல் குறையவில்லை. பாதித்த பருத்தி சாகுபடியாளர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார்.

தினமலர்

**சர்க்கரை உற்பத்தி 25 சதவீதம் உயர்வு**


மே 09,2011,00:26



புதுடில்லி: நாட்டின் சர்க்கரை உற்பத்தி, கடந்தாண்டு அக்டோபர் முதல், நடப்பு ஆண்டு ஏப்ரல் வரையிலுமான ஏழு மாதங்களில், 2.26 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.கடந்தாண்டு பருவ மழை நன்கு இருந்ததால், கரும்பு விளைச்சல் பெருகியுள்ளது. இதையொட்டி, நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்து வருகிறது. நடப்பு, 2010-11ம் சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர் ), கடந்த ஏப்ரல் வரையிலான ஏழு மாதங்களில், சர்க்கரை உற்பத்தி, 25 சதவீதம் அதிகரித்து, 2.26 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில், 1.81 கோடி டன் என்ற அளவில் இருந்தது என, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின் தலைமை இயக்குனர் அபிநாஷ் வர்மா தெரிவித்தார்.நாட்டின் சர்க்கரை உற்பத்தியில், மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, கடந்த ஏப்ரல் வரையிலான ஏழு மாத காலத்தில், 83 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலத்தில், இது, 67.70 லட்சம் டன்னாக இருந்தது. அது போல், இதே காலத்தில் உத்தரபிரதேச மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 51.70 லட்சம் டன்னில் இருந்து, 59 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. சர்க்கரை உற்பத்தியில் இம்மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது. மதிப்பீட்டு காலத்தில், கர்நாடக மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 24 லட்சம் டன்னிலிருந்து, 34.50 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

**சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 5 மடங்கு வளர்ச்சி**

மே 09,2011,00:24



புதுடில்லி: சென்ற ஏப்ரல் மாதத்தில் நாட்டின், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 5 மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது. உள்நாட்டில் சோயாபீன் விளைச்சல், நல்ல அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இதனை தொடர்ந்து, சென்ற ஏப்ரல் மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 3.03 லட்சம்

டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டதை விட 5 மடங்கு (57 ஆயிரத்து 507 டன்)அதிகமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் புண்ணாக்கிற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நம் நாட்டிலிருந்து ஜப்பான், தென்கொரியா, இந்தோனேஷியா,சீனா ஆகிய நாடுகள், மிக அதிகளவில் புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து கொள்கின்றன. இவை தவிர, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள், ஈரான், தைவான் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளும் குறிப்பிடத்தக்க அளவிற்கு, புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து கொள்கின்றன. நாட்டின் மொத்த புண்ணாக்கு வகைகள் ஏற்றமதியில், சோயா புண்ணாக்கின் பங்களிப்பு மிக அதிகமாகும்.நடப்பு எண்ணெய் பருவத்தின் (அக்டோபர்- செப்டம்பர்), முதல் ஏழு மாதங்களில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 33.01 லட்சம் டன்னாக உள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே மாதங்களில், 15.61 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, சோயா புண்ணாக்கு ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், நாட்டின் சோயா உற்பத்தி 1.26 கோடி டன்னாக உள்ளது என, சோயா பதப்படுத்துவோர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

**சின்னசேலம் பகுதிகளில் பாமாயில் சாகுபடி தீவிரம்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,03:36 IST

சின்னசேலம் : சின்னசேலம் பகுதியில் விவசாயிகள் அதிகளவில் உற்பத்தி செய்யும் பாமாயில் பழத்தை வேளாண்மை துறையினர் நேரடி கொள்முதல் செய்கின்றனர். சின்னசேலம் ஒன்றியத்திலுள்ள உலகங்காத்தான், வீரபயங்கரம், தொட்டியம், ராயர்பாளையம், கல்லானத்தம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் பெருமளவில் பாமாயில் சாகுபடி செய்கின்றனர். இவர்களுக்கு உதவியாக வேளாண்மை துறை மூலம் களபணியாளர் மகேந்திரன் கொள்முதல் செய்து, அரியலூர் காவேரி பாமாயில் பிரிவில் விற்பனை செய்கிறார். இப்பழங்களுக்கு ஒரு டன்னுக்கு 5,600 ரூபாய் அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அரசு விலை நிர்ணயம் செய்யபடுகிறது. இதற்கு முன் 5,000 ரூபாய் என இருந்த விலை தற்போது உயர்ந்துள்ளது. பத்து நாட்களுக்கு ஒரு முறை ஒன்றியத்தின் வேளாண்மை துறை மூலம் ஐந்து டன் வீதம் மாதத்துக்கு 15 டன் கொள்முதல் செய்து அனுப்பப்படுகிறது. வரும் மாதங்களில் 10 டன்னாக உயர்ந்து மாதத்துக்கு 30 டன் கொள்முதல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். மேலும் விலை உயரும் வாய்ப்புள்ளதால் பல கிராமங்களில் விவசாயிகள் பாமாயில் பயிரிடுவதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

**மழைக்கு முன் மா அறுவடை தீவிரம்:விலை குறைவால் வியாபாரிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,01:01 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளி காற்றுடன் பெய்துவரும் கோடை மழையால், மா அறுவடை பணி தீவிரமடைந்துள்ளது. மா வரத்து அதிகரித்துள்ள நிலையில், மண்டிகளில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர். தமிழகத்தின் மாங்கனி மாவட்டம் என்று அழைக்கப்படும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக தோத்தாபுரி, செந்தூரா, நீலம், அல்போன்சா, பீத்தர், மல்கோவா, ருமானி, பங்கனப்பள்ளி, காலப்பாடு போன்ற மா ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மா ரகங்கள் உள்ளூர் மாங்கூழ் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவது போக இந்தியாவில் பல மாநிலங்களுக்கும் மற்றும் வெளி நாடுகளுக்கும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மா மற்றும் மாங்கூழ் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு, 100 கோடி ரூபாய்க்கு மேல் அன்னிய செலவாணி ஈட்டப்படுகிறது. இந்த ஆண்டு மா மரங்களில் அதிக அளவில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விட்டது. மத்திய பருவ ரகங்களான தோத்தபுரி, பெங்களூரா மற்றும் பின் பருவ ரகங்களான அல்போன்சா, மல்கோவா காய்கள் பெருக்கமடையும் நிலையில் உள்ளன. இதே வேளையில் முன்பருவ ரகமான செந்தூரா அறுவடை செய்யப்பட்டு, தற்போது விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு செந்தூரா ரகம் ஒரு கிலோ, 12 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் வாங்கி ஏற்றுமதி செய்தனர்.

ஆனால், இந்த ஆண்டு விளைச்சல் அதிகம் உள்ள நிலையில் மாவட்டத்தில் சில தினங்களாக வீசிய சூறாவளி காற்றுக்கு அதிக அளவில் மா காய்கள் மரத்திலிருந்து கீழே விழுந்தது. இதனை விற்பனை செய்ய முடியாத நிலையில் வியாபாரிகள் செந்தூரா ரகத்தை முன்கூட்டியே அறுவடை செய்து விற்பனைக்கு குவித்துள்ளதால், வரத்து அதிகரித்து ஒரு கிலோ செந்தூரா ஆறு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், ஊறுகாய் செய்ய பயன்படுத்தப்படும் கெத்தாமரை மற்றும் சீறி மா ரகங்கள் அதிக அளவில் விற்பனைக்காக கிருஷ்ணகிரி மண்டிகளுக்கு வருகிறது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் ஊறுகாய் மாங்காய்களின் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை பாதியாக குறைந்துள்ளது. இதனால், மா வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர். இது குறித்து கூச்சக்கல்லூரை சேர்ந்த மா வியாபாரி சக்திவேல் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மா மரங்களில் செந்தூரா தற்போது அறுவடை செய்யப்பட்டு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதே வேளையில் ஊறுகாய் செய்ய பயன்படும் நாட்டு மா ரகங்களான கெத்தாமரை மற்றம் சீறி ரகங்கள் முன் கூட்டியே அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. பொதுவாக ஊறுகாய் மாங்காய்கள் ஏப்ரல் மாத இறுதியில் அறுவடை தொடங்கி மே

20ம் தேதி வரை இருக்கும். இந்த ரகங்கள் வறட்சியின் காரணமாக வெதும்பி விட்டால் ஊறுகாய் செய்வதற்கும் பயன்படாமல், பழத்திற்கும் பயன்படாமல் போய்விடும் என்பதால் விவசாயிகள் தற்போது முன்கூட்டியே இதனை அறுவடை செய்து வருகின்றனர். தற்போது ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளி காற்றுக்கு பயந்து விவசாயிகள் முன்கூட்டியே இந்த ரக மாவை அறுவடை செய்து வரும் நிலையியிலும் மா மண்டிகளுக்கு வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விலை பாதியாக குறைந்து தற்போது ஒரு கிலோ ஊறுகாய் மாங்காய் ஆறு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தது, 10 ரூபாய்க்கு மேல் விற்றால் தான் குத்தகை வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். தற்போதுள்ள விலை தொடர்ந்தால் வியாபாரிகளுக்கு நஷ்டமே ஏற்படும். கிருஷ்ணகிரியில் உள்ள மாங்காய் மண்டிகளில் இருந்து மட்டும் தினந்தோறும் ஊறுகாய் ரக மாங்காய்கள், 20 முதல், 30 டன் வரை புனே, கோலாப்பூர் உள்பட வட மாநில நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்தி உழவர் வயல்வெளிப்பள்ளி ஆய்வு; துணை இயக்குநர் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : மே 09,2011,01:57 IST

கும்பகோணம்: திருவிடைமருதூர் பகுதியில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்வெளிகளை சென்னை பருத்தி துணை இயக்குநர் ஞானஒளி ஆய்வு மேற்கொண்டார். கோவை சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி கழகத்தின் கும்பகோணம் கிளை சார்பில் மத்திய ஜவுளி துறை அமைச்சகத்தின் (மும்மை பருத்தி மேம்பாடு இயக்குநர்)அறிவுரையின் படி நெல் தரிசு பருத்தி விவசாயிகள் பயன்பெறும் வகையில் திருவிடைமருதூர் தாலுகா வண்ணக்குடி, மகாஜனக்குடி, கோவிந்தபுரம், நமச்சிவாயப்புரம், நரசிங்கன்பேட்டை ஆகிய இடங்கலில் பருத்தி உழவர் வயல்வெளிப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. சென்னை வேளாண்மை இய க்குநர் அலுவலக பருத்தி துணை இயக்குநர் ஞானஒளி வயல்வெளிப் பள்ளிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் சிமா நிறுவனத்தின் குறைந்த வயதுடைய எஸ்எச்எஸ் 2 ரக பரிசோதனை திடலையும், ஜிகேஎஸ் 1 குறைந்த வயதுடைய வீரிய ஒட்டுரக பருத்தி வயலையும் பார்வையிட்டார். அப்போது பருத்தி விவசாயிகளுக்கு சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். சிமா அலுவலக கும்பகோணம் கிளை பொறுப்பு அலுவலர் சௌந்தரராஜன் வயல்வெளிப் பள்ளியின் முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். ஆய்வின் போது விவசாய உதவியாளர் முனுசாமி உடனிருந்தார். இந்த வயல்வெளிப் பள்ளியில் 50 க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மழைநீரை சேமிக்க நடவடிக்கை விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : மே 09,2011,03:12 IST

காங்கயம் : காங்கயம் சுற்றுவட்டார பகுதிகளில் குளம், குட்டைகளில் தேங்கும் மழைநீர், நொய்யலில் கலந்து வீணா கிறது. மழைநீர் வீணாகாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். காங்கயம் பகுதியில் சிவன்மலை குளம், கத்தாங்கன்னிகுளம் மற்றும் அகிலாண்டபுரம் குளங்கள் உள்ளன; பல இடங்களில் குட்டைகளும் உள்ளன.

பரவலாக மழை பெய்து வரும் மழையால், குளம், குட்டைகள் நிரம்பி வருகின்றன. சில குளம், குட்டைகளில் வண்டல் மண் படிந்து, முட்கள் மற்றும் புதர்கள் மண்டி காட்சியளிக்கின்றன. குளங்கள் வெட்டப்பட்டு பல ஆண்டுகளாகி விட்டதால், நீர் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால், குளம், குட்டைகளில் குறைந்தளவில் மட்டுமே நீர் தேங்குகிறது. கோடை ஆரம்பித்து விட்டதால், வறட்சியை சமாளிக்க விவசாயிகள் அதிகளவில் ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சு கின்றனர். அவை, இரவு, பகலாக இயங்குவதால் அதிகளவில் மின்சாரம் செலவாகிறது. கிணறுகளில் தேவையான தண்ணீர் இருந்தால் செலவழிக்கப்படும் மின்சாரம் பெருமளவில் குறையும்.பெரும்பாலான பகுதிகளில் மழை நீரை சேமிக்க, போதுமான கட்டமைப்பு வசதி இல்லை. இதனால், நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு இல்லாமல் போகிறது. நிலத்தில் விழும் மழை நீரை முறையாக சேமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**நவீன முறையில் ஆடு வளர்க்க ஆர்வம்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,03:12 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதி விவசாயிகள், கொட்டில் முறை ஆடு வளர்ப்பு தொழிலில் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயத்துக்கு அடுத்தபடியாக ஆடு வளர்ப்பு தொழில் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில ஆண்டுகளாக நிலவி வரும் ஆட்கள் பிரச்னை, இளைஞர்கள் மாற்றுத்தொழிலுக்கு சென்று விடுவது போன்ற காரணங்களால், விவசாயிகள் ஆடு வளர்ப்பு தொழிலை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டனர். தற்போது, நவீன முறையில் வெள்ளாடு வளர்ப்பு பிரபலமடைந்து வருகிறது. கொட்டில்களில் அடைக்கப்பட்டு, தேவையான உணவு வகைகளான அகத்தி, கிளாரிசிடியா, குவா புல், மல்பெரி, வேலி மசால், குதிரை மசால் உள்ளிட்ட தீவனப்புல் வகைகளை உற்பத்தி செய்து, இயந்திரங்களால் வெட்டி துகள்களாக்கி உணவாக கொடுக்கின்றனர். இம்முறையில் வளர்க்கப்படும் வெள்ளாடுகள் திடகாத்திரமாக வளர்கின்றன.

இதற்கு ஆட்கள் பிரச்னையும் பெரியளவில் இருப்பதில்லை.பெரிய கொட்டகைக்குள், நான்கடி உயரத்தில் பரண் அமைத்து, அதில் வெள்ளாடுகள் விடப்படுகின்றன. இவற்றுக்கு தேவையான தீவனங்களை, முறையாக தீவனத்தொட்டிகளில் போடுவதால், அவை வீணாவதில்லை. இம்முறையில், சிறு, குறு விவசாயிகளும் அதிகளவில் ஆடு வளர்க்க முடிகிறது. விவசாயிகள் கூறுகையில், "திறந்தவெளியில் மேய்ச்சலுக்கு விடும்போது அதிக நிலப்பரப்பு தேவை. கொட்டில் முறையில் வளர்க்கப்படும்போது, குறைந்த நிலப்பரப்பு இருந்தால் போதும். குட்டிகளை வியாபாரிகள் தோட்டங்களுக்கு நேரில் வந்து வாங்கிச் சென்று விடுவதால், விற்பனை செய்வதிலும் பிரச்னை கிடையாது. செலவில்லாமல் விவசாயத்துக்கு தேவையான இயற்கை உரமும் கிடைத்து விடுவதால், காசு கொடுத்து செயற்கைஉரங்கள் வாங்குவது தவிர்க்கப்படுகிறது,' என்றனர்.

**விவசாயிகளை பட்டதாரிகளாக்கும் திட்டம்: கோவை வேளாண் பல்கலையில் அறிமுகம்: துணை வேந்தர் தகவல்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,02:47 IST

பனமரத்துப்பட்டி: ""பள்ளி படிப்பை பாதியில் விட்ட விவசாயிகளை பட்டதாரிகளாக்கும் நோக்கில், கோவை வேளாண் பல்கலையில் இளங்கலை பண்ணை தொழில் நுட்ப பட்டப்படிப்பு அறிமுகபடுத்தப்பட்டுள்ளது,'' எனீ, துணை வேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார். சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், இளங்கலை பண்ணை தொழில் நுட்ப பட்டப்படிப்பு முதலாமண்டு செமஸ்டர் தேர்வை துவக்கி வைத்து, கோவை வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள, 81 லட்ச பண்ணை குடும்பங்களில், 65 சதவீதம் பேர் சிறு, குறு விவசாயிகள். 15 சதவீதம்பேர் நடுதர விவசாய குடும்பத்தை சேர்ந்தவர்கள். 5 சதவீத பண்ணை குடும்பம் வசதி மிக்கவர்களாக உள்ளனர். கோவை வேளாண் பல்கலையில், 743 புதிய ரக பயிர்கள் கண்டுபிடிப்புகளும், 149 புதிய பண்ணை கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாததால், புதிய ரக பயிர்கள், பண்ணை கருவிகள், விவசாய தொழில் நுட்பங்கள் முழுமையாக அறியமுடியவில்லை. கிராமத்தில் உள்ள, 60 சதவீத விவசாயிகள் பள்ளி படிப்பபை பாதியில் விட்டுள்ளனர். அவர்களையும் பட்டதாரிகளாக்கும் நோக்கில் இளங்கலை பண்ணை பட்டப்படிப்பு கொண்டு வரப்பட்டது. தொலை தூர கல்வி திட்டத்தில் நடத்தப்பப்படும் இளங்கலை பண்ணை பட்டப்படிப்பில் சேர எஸ்.எஸ்.எல்.சி.,படித்திருக்க வேண்டும். தமிழகத்தில் சேலம், ஆடுதுறை, திண்டிவனம், மதுரை உள்ளிட்ட ஆறு இடங்களில் பயிற்சி வகுப்புகள்

நடத்தப்படுகிறது. மூன்று ஆண்டு பட்டப்படிப்பில், ஒரு செமஸ்டருக்கு நான்கு பாடம் வீதம் மொத்தம் 24 பாட பிரிவுகள் நடத்தப்படும். இதில், உளவியல், மண்ணியல், தோட்டக்கலை, பட்டுவளர்ப்பு, வேளாண் கருவிகள் பயன்பாடு, சந்தை நிலவரம், பூச்சியியல், வேளாண் பொறியியல், மார்கெட்டிங், உணவு பொருட்கள் பதபடுத்துதல் உள்ளிட்டவை இடம் பெறுகிறது. வயல்வெளி செயல் விளக்கம், அறுவடை திருவிழா ஆகிய நேரடி பயிற்சிகளும் உள்ளன. பட்டப்படிப்பில், 10 ஆயிரம் விவசாயிகள் சேருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் மட்டும் சேர்ந்துள்ளனர். முதலில் ஒரு செமஸ்டருக்கு, 15 ஆயிரம் ரூபாய் என மூன்று ஆண்டுக்கு, 45 ஆயிரம் ரூபாய் என, கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகளின் நலன் கருதி ஒரு செமஸ்டருக்கு, 7,500 ரூபாயாக குறைக்கப்பட்டது. இதில், அதிகமான விவசாயிகள் சேரும்பட்சத்திலும், அரசின் நிதி உதவி கிடைத்தால் மேலும், கட்டணம் குறைக்க வாய்ப்பு உள்ளது. இந்த பட்டப்படிப்பு மூலம் விவசாயிகள் தொழில் நுட்பங்களை அறிந்து, அதை மற்றவர்களுக்கு கற்று தரவேண்டும். கோவை வேளாண் பல்கலையில் நனோ சயின்ஸ் டெக்னாலஜி தொழில் நுட்பம் மூலம் பயிர் மகசூல் அதிகரிக்க செய்ய ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது. ஜி.ஐ.எஸ்., திட்டத்தில் சேட்டிலைட் மூலம் மண்வளம், நிலத்தடி நீர், மண் தன்மைக்கு ஏற்ற பயிர் நடவு உள்ளிட்டதொழில் நுட்ப தகவல் பெறும் முயற்சி நடந்து வருகிறது. இதுவரை, 31 பயிர்களுக்கு காப்புரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது. கோவை வேளாண் பல்கலையில் டாக்டர் ராமையா ஜீன் பேங்கில், 55 ஆயிரம் பயிர்களின் மரபணுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 லட்சம் பயிர்களின் மரபணுக்கள் சேகரிக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், உதவி பேராசிரியர் வெண்ணிலா, பயிர் பாதுகாப்பு துறை உதவி பேராசிரியர் கீதா உடனிருந்தனர்.

**விவசாயி தோட்டத்தில் 40 கிலோ பரங்கிக்காய்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,02:47 IST

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த புழுதிக்குட்டை கிராமத்தில், இரண்டு அடி உயரத்தில், 40 கிலோ எடையுள்ள ராட்சத பரங்கிக்காய் காய்த்தது. வாழப்பாடி அடுத்த புழுதிக்குட்டை, புதுக்காடு பகுதியை சேர்ந்த விவசாயி குப்பண்ணன்(58). கடந்தாண்டு கோவையில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றிருந்த அவர், அங்கிருந்து பரங்கிக்காய் விதையை வாங்கி வந்துள்ளார். எட்டு மாதங்களுக்கு முன், தன் தோட்டத்தில் அந்த விதையை விதைத்துள்ளார். இயற்கையான சூழல் என்பதால், அந்த விதை எதிர்பார்த்ததை விட நீண்ட கொடியாய் வளர்ந்தது. அந்த செடியில் பிஞ்சு விட்ட ஒரு பரங்கிக்காய் மட்டும், 30 நாளில் இரண்டடி உயரத்திற்கு வளர்ந்ததோடு, 40 கிலோ

அளவிற்கு பருத்து விட்டது. அந்த அதிசய பரங்கிக்காயை காண அப்பகுதி மக்கள் திரண்டதால், உணவுப்பொருளான அந்த பரங்கிக்காய் காட்சிப்பொருளாக மாறியது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் மே 10ல் நிலக்கடலை சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 08,2011,01:25 IST

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில் மே 10ம் தேதி, "மானாவாரியில் நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மே 10ம் தேதி, "மானாவாரியில் நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இப்பயிற்சியில் நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடியின் முக்கியத்துவம், மழையளவு மற்றும் வானிலை முன்னறிவிப்பு, மண் பரிசோதனை, வீரிய ஒட்டு ரகங்கள், புதிய ரகங்கள், விதை நேர்த்தி செய்தல், பயிர் இடைவெளி, விதைக்கும் முறைகள், உரநிர்வாகம் (நுண்ணூட்ட உரம் மற்றும் உயிர் உரம்), களை நிர்வாகம் குறித்து விளக்கப்படுகிறது. அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள் வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**வேளாண்துறை சார்பில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 08,2011,01:04 IST

தர்மபுரி: வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் வேளாண் அறிவியல் மையம் இணைந்து, பாப்பாரப்பட்டி விவசாயிகளுக்கு இலவசமாக தக்காளியில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி வழங்கியது.தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, நல்லம்பள்ளி உள்ளிட்ட வட்டாரங்களில், 24,450 ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தக்காளி விலை குறைவாக இருக்கும் காலத்தில் விவசாயிகள் தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களான ஊறுகாய், ஸ்குவாஸ், ஜாம், கெச்சப் உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது தொடர்பான ஒரு நாள் செயல் விளக்க பயிற்சி பாப்பாரப்பட்டியில் வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) நாகராஜன் தலைமையில் நடந்தது.செயல்விளக்க பயிற்சியை வேளாண்மை அறிவியல் மைய பேராசிரியர் மற்றும் தலைவர்

ஸ்ரீதர் துவக்கிவைத்தார். தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்த பின், அதற்கான விற்பனை வாய்ப்புகள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க மத்திய, மாநில அரசுகள் வழங்கும் சலுகைகள் மற்றும் தக்காளி விவசாயிகள் குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுவதால் உண்டாகும் நன்மைகள் குறித்து தர்மபுரி கோட்ட வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் தாம்சன் விளக்கினார்.

பாப்பாரப்பட்டி அறிவியல் மைய இணை பேராசிரியர் ஜான்சிராணி தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் ஜாம், ஊறுகாய், கெச்சப், ஸ்குவாஸ் உள்ளிட்டவைகளை தயாரிப்பது குறித்து நேரடி செயல் விளக்கம் அளித்தார்.தர்மபுரி மாவட்டம் முழுவதிலிருந்து முன்பதிவு செய்த 35 விவசாயிகள் தக்காளி மதிப்பு கூட்டுதல் செயல்விளக்க பயிற்சியில் கலந்து கொண்டனர்.
மேலும், 17ம் தேதி தக்காளி சாகுபடியில் ஈடுபட்டுள்ள, 30 மகளிர் விவசாயிகளுக்கு, இரண்டாம் கட்டமாக தக்காளியில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதால், ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகள் இணை பேராசிரியர் மற்றும் தலைவர் வேளாண்மை அறிவியல் மையம், பாப்பாரப்பட்டி என்ற முகவரியிலும் அல்லது 04342-245860 என்ற டெலிஃபோன் எண்ணிலும் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம் என, வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**ஆலங்கட்டி மழையால் மா விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : மே 08,2011,01:47 IST

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆலங்கட்டி மழை பெய்த்தால் மா விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர். கன மழையின் போது இடி தாக்கியத்தில் வலசகவுண்டனூரில் கான்கிரீட் வீடு சேதமடைந்து "டிவி'க்கள் வெடித்து சிதறியது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக கன மழை பெய்து வருகிறது. ஓசூர் பகுதியில் கடந்த இரு நாட்களுக்கு முன் வீசிய காற்றால் நகர் முழுவதும் மின் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. சூறாவளி காற்றால் ரோஜா மற்றும் குடமிளகாய் பயிர் செய்யப்பட்டிருந்த பசுமை குடில்கள் சேதமடைந்தது.போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் நேற்று முன்தினம் இரவு பலத்த காற்று வீசியது. குறிப்பாக அரசம்பட்டி, போச்சம்பள்ளி, பாரூர், வலசகவுண்டனூர், காட்டு வென்றஅள்ளி, கோனனூர் ஆகிய பகுதிகளில் வீசிய பலத்த சூறாவளி காற்றால் அந்த பகுதியில் இருந்த 25க்கும் மேற்பட்ட தென்னை மரங்களும், 15க்கும் மேற்பட்ட பனை மரங்கள் வேரோடு சரிந்து விழுந்தது. இதனால், மின்விநியோகம் இந்த பகுதியில் முற்றிலும் தடைபட்டது.வலசகவுண்டனூரில் அரசு பஸ் டிரைவர் கருணாநிதி என்பவர் வீட்டில் இடி

தாக்கியத்தில் கான்கீரிட் தளம் சேதமடைந்தது. அப்போது வீட்டில் இருந்த "டிவி' மற்றும் மின்சாதன பொருட்கள் வெடித்து சிதறியது.

வீட்டில் இருந்தவர்கள் ஆலங்கட்டிகளை சேகரிக்க வீட்டுக்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தால் அனைவரும் உயிர் தப்பினர்.அதே பகுதியில் இருந்த வேடியப்பன் என்பவரது வீட்டில் இருந்த டிவி மற்றும் மின் சாதன பொருட்கள் வெடித்து சிதறியது. போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்பட்டுளள்ளது. குறிப்பாக மத்திய பருவ ரகமான பெங்களூரா அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெங்களூரா ரக மா தற்போது காய்கள் பெருக்கமடைந்து வரும் நிலையில் உள்ளது. நேற்று முன்தினம் இரவு பெய்த ஆலங்கட்டி மழையால் பெங்களூரா வகை மா ரகங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது.ஆலங்கட்டி விழுந்த காய்கள் அனைத்தும் அழுகிவிடும் என்பதால் மா விவசாயிகளும், வியாபாரிகளும் கலக்கமடைந்துள்ளனர். சூறாவளி காற்றுக்கு அறுவடைக்கு தயாராக இருந்த முன்பருவ ரக மாங்காய்கள் மற்றும் பெங்களூரா வகை மாங்காய்கள் கொட்டியதால் வியாபாரிகள் தோட்டங்களுக்கு சென்று அதனை சேகரித்து வருகின்றனர்.

**தொடரும் ஏலக்காய் வரத்து ஆக்ஷன் மையங்களில் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : மே 08,2011,23:21 IST

கம்பம் : ஏலத்தோட்டங்களில் சமீபத்தில் பெய்த மழையால், காய் வரத்து தொடர்கிறது. 30 முதல் 40 ஆயிரம் கிலோ வரை வரத்து இருப்பதால், ஆக்ஷன் மையங்கள் தொடர்ந்து தங்களது வர்த்தகத்தை நடத்தி வருகின்றன. இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. ஏலக்காய் சாகுபடியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள், தங்களின் ஏலக்காயை இதற்கென ஸ்பைசஸ் வாரியம் அனுமதித்துள்ள ஆக்ஷன் சென்டர்களில் வைத்து விற்பனை செய்கின்றனர். பொதுவாக ஏலக்காய் வரத்து ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி யில் இருக்காது. தோட்டங்களில் ஏலக்காய் பறிப்பது நிறுத்தப்படும். மீண்டும் ஜூன் இறுதி, ஜூலை தொடக்கத்தில் காய் எடுப்பு துவங்கும். இந்த ஆண்டு சமீபத்தில் பெய்த மழை காரணமாக ஏலக்காய் பறிப்பு தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் ஆக்ஷன் கம்பெனிகள் தங்களது வர்த்தகத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றன. இந்த ஆண்டு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் கிலோ வரை ஏலக்காய் வரத்து உள்ளது. தொடர்ந்து காய் வரத்து இருந்தாலும், விலை தொடர்ந்து இறங்கு முகமாக உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சி.பி.எம்.சி.எஸ்., ஆக்ஷனில் 40 ஆயிரம் கிலோ வரத்து இருந்தது. சராசரி விலையாக கிலோவிற்கு 783 ரூபாய் கிடைத்துள்ளது.

**மீன்களின் விலை பன்மடங்கு உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 08,2011,22:32 IST

ராமேஸ்வரம் : மீன் பிடி தடைகாலம் என்பதால் விசைப்படகுகள் கடலுக்கு செல்லாத நிலையில், ராமேஸ்வரம் கடல் பகுதியில் நாட்டுப்படகுகள் சென்றும் மீன்களின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. தமிழக கடல் பகுதியில் மீன்பிடி தடை அமலில் உள்ளதால், விசைப்படகுகள் கடலுக்கு செல்லாமல் மராமத்து பணியில் ஈடுபட்டுள்ளனர். நாட்டு படகுகள் மட்டு@ம வழக்கம்போல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு ள்ளன. நாட்டுபடகு, கரைவலை மீன்பிடிப்பில் அதிகளவில் மீன்கள் கிடைக்கிறது. ஓலைவலை, வீச்சுவலை மூலமும் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இருந்தபோதும் ராமேஸ்வரம் பகுதியில் தேவைக்கேற்ப மீன்வரத்து இல்லாததால் மார்க்கெட்டில் விற்கப்படும் மீன்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த மாத துவக்கத்தில் கிலோ 175 க்கு விற்ற சீலா மீன் 400 , 80 க்கு விற்ற விளமீன் 160 , 20 க்கு விற்ற சூடை 70 , 100 க்கு விற்ற முரல் மீன் 200 , 120 க்கு விற்ற நண்டு 220 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. போதிய அளவிற்கு மீன்கள் கிடைக்காததால், பிடித்த மீன்களை வாங்குவதற்கு நாள்தோறும் தள்ளுமுள்ளு நடக்கிறது. மொத்த வியாபாரிகளும் நாட்டுப்படகில் வரும் மீன்களையே போட்டி போட்டு வாங்கும் நிலையில், எந்த விலை கொடுத்தாவது மீன்களை வாங்கிச்செல்ல வேண்டிய நிலையில் மீன்உணவு பிரியர்கள் உள்ளனர். நகராட்சி மார்க்கெட்டில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு விற்று வந்த மீன் வியாபாரிகள், தட்டுப்பாட்டை சாதகமாக்கிக்கொண்டு விருப்பம்போல் மீன்களுக்கு விலை ஏற்றி விற்கின்றனர். இம்மாத இறுதிவரை இ@தநிலை நீடிக்கும்.

**காத்திருக்கும் மாம்பழ பிரியர்கள்**

பதிவு செய்த நாள் : மே 08,2011,01:51 IST

ராஜபாளையம் : ராஜபாளையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் மா, பலா, தென்னை, வாழை தோப்புகள் உள்ளன. தற்போது மாம்பழ சீசனாக இருப்பதால், மா மரத்தில் காய்கள் பெரிதாகும் முன்னே அவசரப்பட்டு பறிக்கப்படுகின்றன. இந்த காய்கள் கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இதை சாப்பிடுவதால், உடல் நலம் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதனை தவிர்க்க மாம்பழ பிரியர்கள், காற்று காலத்திற்காக காத்திருக்கின்றனர். ஜூனில் காற்று அடிக்க துவங்கும்போது, பறிக்கப்படும் மாங்காய்களை இயற்கை முறையில் வீட்டிலேயே பழுக்க வைக்கின்றனர். இந்த மாம்பழங்கள் சதை பிடிப்புடன் அதிக சுவையாக இருக்கும்.

**வாழை சாயாமல் இருக்கதோட்டக்கலை "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : மே 08,2011,01:37 IST

கரூர்: "பலத்த சூறாவளி காற்றால் வாழை மரம் சாயும் நிலை ஏற்பட்டுள்ளது. மரங்கள் சாயாமல் தடுக்க மூங்கில் அல்லது சவுக்கை முட்டுக்கொடுத்து தடுக்கலாம்' என கரூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் வளர்மதி அறிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கரூர் மாவட்டத்தில் கோடைமழை பெய்கிறது. சில நேரங்களில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன் வீசிய சூறாவளி காற்றால் கரூர் யூனியன் பகுதிகளான குப்புச்சிபாளையம், வாங்கல், நன்னியூர், நஞ்சை கடம்பங்குறிச்சி, நஞ்சை தோட்டக்குறிச்சி, புகளூர் ஆகிய பகுதிகளில் வாழை மரங்கள் சாய்ந்தது.தற்போது கோடை மழையுடன் பலத்த காற்று வீசுவதால் மீண்டும் வாழை மரம் சாயும் அபாயம் உள்ளது. இதனால் வாழை பயிர் செய்துள்ள விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வாழை மரங்கள் சாய்வதை தடுக்க சவுக்கு, மூங்கில் கம்பு உபயோகித்து வாழைக்கு முட்டுக் கொடுக்கலாம். இதனால் வரும் காலங்களில் பலத்த காற்று வீசும்போது வாழைக்கு எவ்வித சேதமுமின்றி தவிர்க்கலாம்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***மார்ச் மாதத்தில் தேயிலை உற்பத்தி 16 சதவீதம் உயர்வு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஆண்டு மார்ச் மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 16 சதவீதம் உயர்ந்து 5.67 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 4.90 கோடி கிலோவாக இருந்தது.*

தேயிலை உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வரும் அசாம் மாநிலத்தில் உற்பத்தி அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும். அசாமில், மார்ச் மாதத்தில் தேயிலை உற்பத்தி 2.37 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. தென் மாநிலங்களிலும், மேற்கு வங்காளத்திலும் உற்பத்தி சரிவடைந்துள்ளது.

இந்நிலையில் ஜனவரி–மார்ச் மாத காலத்தில் தேயிலை ஏற்றுமதி 27 சதவீதம் சரிந்து 3.96 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 5.40 கோடி கிலோவாக இருந்தது. மார்ச் மாதத்தில் 1.19 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு மார்ச்சுடன் ஒப்பிடும்போது 49 சதவீதம் குறைவாகும்.

உலக அளவில், தேயிலை உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளன. தேயிலை ஏற்றுமதியில் நம் நாட்டின் பங்களிப்பு 14 சதவீதமாகும். இந்தியாவில் 1,600 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. இத்துறையில் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் பணிபுரிந்து வருகின்றனர்.

தினகரன்

## மல்லிகைப்பூ விலை உயர்வு

பதிவு செய்த நாள் 5/7/2011 1:30:27 AM



சேலம் : சேலம் பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூ நேற்று ஒரு கிலோ ஸி220க்கு விற்பனை செய்யப்பட்டது. தமிழகம் முழுவதும் கடந்த வாரம் பூக்கள் வரத்து அதிகரிப்பால் விலை சரிந்தது. மல்லிகைப்பூ மிகக் குறைந்தபட்சமாக ஒரு கிலோ ஸி50க்கு விற்கப்பட்டது. இந்நிலையில் தற்போது பூக்கள் விலை உயர்ந்து வருகிறது.

சேலம் வ.உ.சி பூ மார்க்கெட்டிற்கு பனமரத்துப்பட்டி, கம்மாளப்பட்டி, ஜல்லூத்துப்பட்டி, வாழப்பாடி, அயோத்தியாபட்டணம், ஆத்தூர், தர்மபுரி, பொம்மிடி பகுதிகளில் இருந்து மல்லிகை, பிச்சி, அரளி, சம்பங்கி, சாமந்தி, கனகாம்பரம், கோழிக்கொண்டை உள்ளிட்ட அனைத்து வகை பூக்களும் வருகிறது.

இந்த பூக்களின் விலை கடந்த வாரம் மிகவும் சரிந்திருந்தது. கடந்த 3 நாட்களாக விலை அதிகரிக்க துவங்கியது. நேற்று முன்தினம் 1 கிலோ மல்லிகைப்பூ ரூ.400க்கு விற்கப்பட்டது. நேற்று ரூ.220க்கு விற்பனையானது. அட்சயதிருதியை நாளையொட்டி விலை மிகவும் அதிகரித்திருப்பதாக பூ வியாபாரிகள் தெரிவித்தனர். இதேபோல் பிச்சிப்பூ ரூ.60ல் இருந்து ரூ.100 ஆக உயர்ந்து விட்டது. கடந்த வாரம் ரூ.15க்கு விற்கப்பட்ட அரளி நேற்று ரூ.100க்கு விற்றது.

கனகாம்பரம் ஒரு கிலோ ரூ.250க்கும், சம்பங்கி ரூ.100க்கும், சாமந்தி ஸி80க்கும் விற்கப்பட்டது. 100 ரோஜா ரூ.150க்கு விற்பனையானது. மார்க்கெட்டில் நேற்று வழக்கத்தை விட மிக அதிகமாக கூட்டம் காணப்பட்டது. விலை உயர்வு தொடர்பாக பூ வியாபாரிகள் கூறுகையில், இம்மாத துவக்கத்தில் அடுத்தடுத்து விசேஷ நாட்கள் வரத்துவாங்கியுள்ளது. அதனால் பூக்களின் தேவை அதிகரித்து, விலை உயர்ந்துள்ளது. இதனால் பூ விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து ள்னர் என்றனர்.